REGD No. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 2—3—52 | இதழ் 35

பூலோகப்பயணம்

# தங்க ரதம்

அண்ணல்

"காமி! சத்யபாமா, தவைத் திறவாய்!" ன்று பாடவேண்டிய வசியமேற்படவில்லை, ந்தாமனுக்கு. 'வைகுந் வாசம்' திறந்துகிடந் து. எட்டிப்பார்த் ர், துஷ்டநிக்ரசிஷ்ட. ரிபாலனம் செய்யும் காவிஷ்ணு. பாரியை க்ஷிமி, பரமானந்தத்தோடு இருந் ள். நாரதர் கானம் பாட, கின்னர ம்புருடர், கீதத்துக்கு 'பின் ணி' இசைக்க, இரண்டு மூன்று தவமாதர்கள், புது 'ஸ்டையிலில்' னமாட, அதைப் பார்த்துப் ரசவமடைந்து கொண்டிருந்தாள், ந்தாமன் துணைவி. அவளது கத்திலேற்பட்ட மலர்ச்சி, பரந் மன் உள்ளத்தைப் பரவசத்தி ழ்த்திற்று. வாயிலிலே நின்றபடி, சித்துக்கொண்டிருந்தார், நாரா ணமூர்த்தி.

"கோபாலனோடு நான்—
ஆடுவேனே
நந்த கோபாலனோடு......"

இந்தப் பாடலை நாரதர் பாட, அரம்பைமாதர், அபிநயம் பிடித் னர். அவர்கள், நாட்டியம், இதய ஆசையை எடுத்துக் காட்டுவது போலிருந்தது. 'நந்த கோபாலன்' னும் போது அவர் தம் முகம் மலர்ந்ததும், ஆடுவேனே' என்ற வார்த்தைக்கு அபிநயம் பிடிக்கை யில் அவனோடு கூடியாடும் மோகன லாகிரி கொண்டோர் போலவும் ஆடினர்! மேகவர்ண சாமளநிறத் தானே, தொட்டிழுத்து கட்டியில் விளையாடத்தான் முடியாது, அவர் னால். அந்த இன்பத்தை, இப்படி யாவது, அனுபவிப்பதை யார் தடுக்கமுடியும்? ஆகவே, ஆடினர். 'என் கோபாலனோடு' எனும் போது, அவர்தம்உடலில் ஏற்பட்ட வளைவும் நெளிவும், பிரமாதமாயிருந் தது! ஆனல், அந்த 'என்' என்ற வார்த்தையைக் கேட்ட தேவி லக்ஷிமி, படுக்கையறையைப் பார்த் தாள்—பெருமூச்சுவிட்டாள்.

'ஹலோ! டியர். இங்கே இருக்கி றேன்' என்று, கலகல. வெனச் சிரித்தார், மகாவிஷ்ணு.

"வந்துவிட்டீர்களா!" என்று தாவியோடினள், தாமரைச்செல்வி.

"எஸ்!" என்று, சொல்லியவண் ணம், ஓடிவந்தவளைத் தூக்கி......... நாரதரும் அரம்பையரும், கண்களை மூடிக்கொண்டனர். மெதுவாக, அந்த இடத்தைவிட்டு, ஜோடி ஜோடியாக, நழுவலாயினர்.

"பிரபு! எங்கே, போயிருந்தீர் கள். என்ன அருமையான நடனம் தெரியுமோ? ஏதோ, பூலோகத்தி லிருந்து கற்றுவந்ததாம் — நாரதர் பாட, அரம்பையர் ஆட......அபூர் வம்! போங்கள்!!"

"ஓ! சினிமா பாட்டா?"

"அதென்ன பிரபு! சினிமா!"

"பூலோக சிருஷ்டி, அது. தேவி! Wher is our கருடன்?"

"என்னது?"

"ஓ! உனக்கு இங்கி லீஷ் தெரியாதா?"

"அதென்ன சுவாமி, இங்கிலீஷ்!"

"பூலோகத்தில், வெள்ளைக்காரான்னு ஒரு இனத்தா — இருக்கா. அவா, பேசறபாஷை நம்மளவாளும்பேசறு இப்போ!

"பிரபு! பூலோகம் போனவே உங்கள் புத்திபேதலிச்சுடுது. வீண கெட்டுத் திரும்பறேள். போக வேணும்னும் கேட்கமாட்டேங்கி றேள், இன்னைக்கு, ஏன், போனேள்? எங்கே போனேள்?"

"பக்தா கூப்பிட்டா—மங்கள மானகாரியம். மகாராஜா கூட வந் திருந்தான்..............."

"யார் பிரபு, அந்த மகாராஜா!"

"மைசூர் மகாராஜா! நூற்றுக் கணக்கானமைல் வந்து, பக்தா ளோடு கலந்துண்டு, தேரிழுத்தான் தேவி, தேரிழுத்தான்!"

"மகாராஜன்—தேரை இழுத் தானு? என்ன, பிரபு! கேலி! 'மகா ராஜாதான் மனுஷாளில்லே— ஏழைகளோடுகலக்கமாட்டா.பெரிய அரண்மனை உண்டு—நம்ம கோயில் மாதிரி. அதிலிருந்து கிளம்பவே, மாட்டா" என்றெல்லாம் சொல்லி யிருக்கேளே!"

"சொன்னேன். ஆனு, காலம் மாறுதேல்லியோ? அதனுலே, பக்தரோடு சேர்ந்து, வடம்பிடித்தி ழுத்திருக்கான்!"

"எங்கே சுவாமி, இந்த அதிசயம்?"

“ஆழ்வார்திருநகரி யிலே—அது தான், நம்ம, நம்மாழ்வார் பிறந்த இடம். அங்கே, 15ந்தேதி, விமரிசையா வெள்ளோட்டம் நடத்தின. புதுத்தேர் ஒன்று கட்டியிருக்கா—ஒருலட்சரூபாயிலே!”

“ரதமா! ஒருலட்சத்திலா! என்ன பிரபு, இது? பூலோகவாசிகள் பொருளில்லாமல் திண்டாடறு—செத்துவிழறு, வீதியிலேன்னு சொன்னீங்களே, முன்பு!”

“உண்மைதான். அதனுலே! பகவத் காரியத்தை பக்தா, நிறுத்திடுவாளோ?”

“ஓகோ! நம்ப பக்தாளெல்லாம் பணக்காரர்களா?”

“நீ ஒரு பைத்யம்! நம்ம பக்தா கிட்டே பணமிருக்கணும்னு இல்லே தேவி. பணத்தை சம்பாதிக்கத் தெரிஞ்சவா—அவா”

“எப்படி பிரபு! தொழில் அறிந்தவாளோ?”

“ஊஹு-ம்”

“வியாபாரத்திலே இருப்பாவாளோ?”

“வியாபாரத்திலேருந்தா, வேதமோத யாரிருக்கா?”

“பின்னே, எப்படிப்பிரபு, பணம் கிடைக்கும் — லக்ஷரூபாயில் தேர் கட்ட.”

“ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே! தேரின்னாலும் சாதாரண தேரல்ல. கோ-ரதம் அதுவும் தங்கம்—வெள்ளியாலே கட்டப்பட்டது?”

“தங்கம் வெள்ளியா?”

“திகைக்காதே லக்ஷ்மி! அசல் தங்கம். அசல் வெள்ளித்தகடு”

“நம்பமுடியலியே, பிரபு! நாமதாரிகளான நம்ம பக்தாளுக்குத்தங்கமும் வெள்ளியும்—ஒரு தேருக்குப் போடற அளவுக்கு...? ஒருவேளை, பூலோக பக்தா, இன்னும் ‘திருமங்கையாழ்வாரை’ப் போலவே இருக்காளோ?”

விஷ்ணு சிரிக்கிறார்—அவருக்குப் பழைய ஞாபகங்கள் வந்துவிடுகின்றன. லக்ஷ்மியை அணைத்துக் கொண்டு, “கண்மணி! உன் சந்தேகங்களை நிவர்த்தி செய்கிறேன். புறப்படு. பூலோகம் போகலாம்” என்கிறார். கருடவாகனம் புறப்படுகிறது.

* * *

கோ-ரதம் கட்டப்பட்ட ஆழ்வார் திருநகரில், ஒரு வீடு. உடம்பெல்லாம் நாமதாரியான, ஒரு பக்தரின் இல்லம். பக்தர், பாரியையோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

“கோரதம் — பிரமாதமாத்தான் இருக்கு கல்லைப் பதிச்சு, தங்கமும் வெள்ளியும். எல்லாம் என்னுலே தான்னு பிரமாதமாப் பேசறேள்! ஆனா, என்ன பலன்? பக்கத்து வீட்டுக்காரரைப் பாருங்கோ ரதம் கட்ட ஆரம்பிச்சதிலேருந்து முடியறதுக்குள்ளே— ஆத்துக்காரி கழுத்திலும் கையிலும் மின்னுது; தங்கம்! நீங்க, என்னடான்னா, ஒரு சங்கிலிக்கில்லாமெ தவிக்கிறேள்..”

“பகவான் அனுக்கிரகிப்பார். பாபமல்லவோ, அவர் சொத்துக்கு ஆசைப்படறது”

“பாபமோ, புண்யமோ! அவாளவா சவுகரியம் பண்ணிட்டா...... நீங்கதான்”

> நெல்லை ஜில்லாவில் உள்ள ஆழ்வார் திருநகரியில் லட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டு தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட “கோ-ரதத்தை” மைசூர் மகாராஜா பிப். 15ல், வடம் பிடித்து வெள்ளோட்டம் செய்தார்.

சகதர்மிணி முகம்கோணுவதைக் கண்ட அவர், எழுந்திருந்துபோகிறார்—பெட்டியொன்றைத் திறக்கிறார். சிறு மூட்டையொன்றோடுவருகிறார். அவிழ்த்துக் கொட்டுகிறார். பணமும் நோட்டும் சிதறுகிறது.

“ஏதுன்னா?”

“அதெல்லாம் கேட்காதடீ!எடுத்துக்கோ. போதுமா?”

“சமத்துன்னா சமத்துத்தான்! நேக்கு தெரியுமே........”

படுக்கை அறை மூடப்படுகிறது. பகவத்—தம்பதிகள், இந்தப் “பக்த லீலை”யைப் பார்த்த வண்ணம், திரும்புகிறார்கள். லக்ஷ்மி, ஜாடையாகப் பார்க்கிறாள் ‘என்ன, இது?’ என்று கேட்கும் பாவனையில். ‘பேசாமல் வா’ என்று காதோடு சொல்கிறார், கருடவாகன ரூபர்.

* * *

ஜொலிக்கிறது கோரதம்! அதன் மேலே போடப்பட்டிருக்கும், தங்கத்தகடும், வெள்ளியும், பள பள[illegible] கின்றன. லக்ஷ்மியே திகைக்கிறா[illegible] அப்போது அங்கே பேசப்படுவது[illegible] காதில் விழுகிறது.

‘பிரமாதமான சேவை! அழகா[illegible] ரதம்! அற்புதம்!!”

“அற்புதமா, ஏன் இருக்காது[illegible] லட்சரூபாயில்லே.........”

“லட்சமா?”

“ஆமாம்பா, ஆமாம்!”

“யார் தந்தா—இவ்வளவு ரூபா!”

“நீயும் நானும் எங்கேயிருந்[illegible] தரப்போகிறோம் — ‘ரேஷன்’ அ[illegible] சிக்கே தான் திண்டாடறோமே[illegible] இதெல்லாம், பணக்காரர்கள் கொ[illegible]டித்தந்தது.........”

“கடவுளுக்கு ரதம். ஆனால்—இங்கே ஒரு கல்லூரி உண்டோ?”

“ஊ......ஹ-ு.........ம்”

“பெரிய ஆஸ்பத்திரி!”

“ஊ......ஹ-ு......ம்”

“சின்னதா, ஒரு வாசகசாலை!”

“ஊ......ஹ-ு......ம்”

“ரதம் மட்டுமிருக்கு! நல்ல உல[illegible]கம்பா இது.”

லக்ஷ்மி காதில், இந்த வார்த்தை[illegible]கள் கேட்கிறது. நைவேத்யமாகும்[illegible] தளியல் படையல் பொங்கல் மு[illegible]லானவைகளில் கவனத்தைச் செலுத்தியிருந்த கமலக்கண்ணனை, அழைத்துக்கொண்டு புறப்படுகி[illegible]றாள் — அவசரமாக. கருடன் பற[illegible]கிறான். ‘இந்தத் தேர் கட்ட, பணம் தந்த ஒருவர் வீட்டுக்குப்போ!” என்று உத்திர விடுகிறாள், திருமகள்.

* * *

‘பாரதமாதா பவனம்’ என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு மாளிகை.‘சோபா’ ஒன்றில் உட்கார்ந்திருக்கிறார், மாளிகையின் அதிபதி. எதிரே, கணக்கப்பிள்ளை, நிற்கிறார்.

“ஏன்யா! என்ன விசேஷம்! எங்கே, வந்தே.....கணக்கெல்லாம் முடிஞ்சுதா.”

“முடிஞ்சுகிட்டு வருதுங்க. ஒரு சந்தேகம்......”

என்னது? எந்தக் கணக்கிலே சந்தேகம்......

“கருப்புக் கணக்கிலா—வெள்ளையிலா?”

"இரண்டிலுந்தாங்க!"

"விழிக்கிறதைப்பாரு—சேச்சே!
ங்களோடு மாரடிக்கிறதிலேயே
பிருபோயிடும்போலிருக்கு—
சால்லித்தொலே. என்னது?"

"ஐயாயிரம், கோரத் திருப்
ணிக்கு..............."

"என்னது?"

"கோ—ரத் திருப் பணிக்
ங்க................"

"ஆமாம், தந்திருக்கேன்—ஐயா
ரம்!"

"ஆமாம்........."

"அதை, கருப்புக் கணக்கிலே
றிக்கவா—அல்லது........."

"என்ன புத்திசாலிய்யா! ஏன்
காடுத்தோம் ஐயாயிரம்—கோயில்
ருப்பணிக்கு. தெரியுமா?"

"பகவத் கைங்கரியம்! பரந்தாம
வக்குச் செஞ்சா, போறகதிக்கு
ல்லது கிடைக்கும்னு......"

"மகாபுத்திசாலி! அதற்காகத்
ான் கொட்டிக்கொடுத்தோமே"

"..............."

"அந்த ஐயாயிரத்தையும், இன்
ம் டாக்ஸ்' கணக்கிலே எழுது.
அதோட, தெய்வகாரியமா, போய்
ந்ததிலே என் பத்து ரூபா ஆயி
ம்னு சேர்த்து எழுது......"

"சரிங்க!........!"

"ஆடிடர் கேட்டா, விளக்கமா,
ஷயத்தைச் சொல்லு. மறந்து
றந்து எழுதாம விட்டுடாதே!
யாயிரம் குறையுது — இன்கம்
ாக்ஸ் கணக்கிலே—தெரியுதா..."

"புரியுதுங்க........."

லக்ஷ்மிக்கு தலைசுற்றுவதுபோலி
ருக்கிறது. பணக்காரருக்குப் பக்கத்
திலேயிருக்கும் அவரது மனைவி-
யைப்பார்க்கிறாள்-அவளது கழுத்து
கை, எல்லாம் 'தங்கத்தால்' நிரம்பிக்
டக்கிறது. விஷ்ணுவோடு—புறப்
படுகிறாள். கருடன், 'எங்கே?'
என்று கேட்கும் பாவனையில்
திரும்புகிறான். 'தங்கம் எடுக்கும்
இடத்திற்கு......' என்று கட்டளை
யிடுகிறாள் கமலகுமாரி.

* * *

சிற்றெறும்புகள், ஊர்வதுபோலத்
தெரிகிறது, ஒரு இடம். அங்கே
இறங்குகின்றனர். 'சுவாமி' இந்த
இடத்தின் பெயரென்ன?' என்று
நாதனைக்கேட்க, 'கோலார்' என்று
கூறுகிறார் திருமால்.

மாயா ரூபத்துடன், தங்கவயலுக்குள் செல்லுகின்றனர். அழுக்கு மேனி! தலையிலே குல்லா! உடலெல்லாம் வியர்வை! கனி பிளந்து கொண்டிருக்கிறார்கள், ஆயிரமாயிரம்பேர்! கனிச் சுரங்கத்தைச் சுற்றி காவல்! அவர்களைப் பரிபாலிக்கும் அதிகாரிகள் தங்கியிருக்கும் பெரிய பெரிய கட்டிடங்கள்! மற்றோர் பகுதியில்—சிறுபொந்துகள்போல வீடுகள்! அங்கே, பரட்டைத்தலையராய் வயிறு உலர்ந்து வாடிடும் உருவங்கள்! 'கனிக்குச் சென்ற கணவன் திரும்பவேண்டுமே' என்று கலங்கியிருக்கும் காரிகைகள்! பல்லாயிரம் அடிக்குக்கீழ்! பூமிக்குக்கீழே!! வேதனையோடு, வெட்டுகிறார்கள்—ஆயிரமாயிரம்பேர். இருட்டுப் பாறைகளைப் பிளக்கின்றனர். 'பளபளக்கும் தங்கமது பாறையிலே ஒட்டியிருக்கு—அதைப் பார்த்தெடுத்து வந்து நாங்க பவுனுக்கிறோம்!' என்று களைப்பைப் போக்க, தெம்மாங்கு பாடிக்கொண்டு வெட்டுகிறார்கள். கோரமாக இருக்கிறது, இந்தக் காட்சி!

"நாதா!" என்கிறாள், செல்வக்குமாரி.

'லக்ஷ்மி!"

"நம் நரகத்தைவிட கோரமாயில்லே"

பதில் பேசவில்லை, பரந்தாமன். லட்சுமி பேசுகிறாள்.

"பார்த்தீர்களோ! இந்தப் பாடுபடும் மக்களின் மனைவி மக்களை"

"பார்த்தேன்! பார்த்தேன்!!"

"இவ்வளவு கஷ்டப்பட்டு தங்கத்தை எடுக்கும், அவர்கள் கழுத்திலும் கையிலும் என்ன இருந்தது?"

"ஒண்ணுமில்லை!"

"அதுமட்டுந்தானா? வேறேதாவது இல்லீயோ!"

"இருந்தது! கருப்புமணி, கழுத்தில்—கைகளில்"

"கண்ணாடிவளையல்!"

"காதுகளில்?"

"நெட்டித்தக்கை"

உரையாடல் முடியவில்லை—'படார்' எனப் பெருஞ்சப்தம் ஒன்று கேட்கிறது. பூமிக்குக்கீழே—மண்பாறைகள் வேகமாகச்சரிந்து விழுகின்றன. தொழிலாளர் பலர் புதைகின்றனர். ஐயோ! ஐயோ!! என்று கூச்சல், அபாயச் சங்கு ஊதுகிறது. தொழிலாளர் குடிசைகளில் அலறல் எழும்புகிறது. லக்ஷ்மி பதைக்கிறாள்—பரந்தாமன் கண்முன்னே 'தங்கரதம்' தென்படுகிறது. 'லக்ஷ்மி' என்கிறார். அவளோ, பரந்தாமன், தோளில் மூர்ச்சையாகிச் சாய்கிறாள்!!

## மாணவருலகில்!

அ' நகர்:- அண்ணாமலைப் பல்கலைக் கழக திராவிட மாணவ முன்னேற்றக் கழக துவக்க விழா 17—2—52 மாலை நடைபெற்றது. அதையொட்டி அண்ணாமலை நகர் குளக்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தி.மு.க பொதுச் செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றினார் மத்திய திராவிட மாணவ முன்னேற்றக் கழக அமைப்பாளர் கே. ஏ. மதியழகனும் கலந்துகொண்டார். மேற்படி பொதுக் கூட்டத்துக்கு அ'நகர் மாணவ முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் டி. சோமசுந்திரம் (இன்சினீரிங் கல்லூரி மாணவர்) தலைமை வகித்தார்.

குடந்தை:- குடந்தை அரசினர் கல்லூரி தமிழ்ப் பேரவையின் ஆண்டு நிறைவு விழா 18–2–52 அன்று கல்லூரித் தலைவர் விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் கிருஷ்ணமூர்த்தி யாவரையும் வரவேற்றார். தோழர் சி. என். ஏ., 'மாணவருலகு' பற்றி சொற்பொழிவாற்றினார்.

வாணியம்பாடி:- இஸ்லாமியக் கல்லூரி தமிழ் பேரவையின் கூட்டம் 20—2—52 அன்று கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கபூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'வாழ்வும் வளமும்' எனும் பொருள் குறித்து, தோழர் அண்ணாதுரை சொற்பெருக்காற்றினார்.

## இனி நடப்பது

சென்னை:- பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேரவையில் 3—3—52 திங்கட் கிழமை மாலை தோழர் சி. என். ஏ., ஆங்கிலத்தில் பேசுவார்.

# வகுப்பறையில்!

[அரவரசு]

★

## தமிழ் வகுப்பு

ஆசி:- டேய்! ராமா! கடவுள் வாழ்த்துச் செய்யுளை ஒப்பி.

ராமன்:- சாதிகுலம் பிறப்பிறப்பு பந்தம் முத்தி.........செய்வாம்.

ஆசி:- இறைவணக்கம் பொருள் இலக்கணம் கூறு.

அடுத்தமாணவன்:- இறைவனை வணங்குதல் இரண்டாம் வேற்றுமைத் தொகை சார். வணக்கம் என்பது தொழிற்பெயர் சார்!

ஆசி:- இறை வணக்கத்தின் அவசியம் என்ன?

மாண:- எடுத்தகாரியம் இனிது முடிய இறைவன் அருள் வேண்டும் சார். அதனால் முதலில் இறை வணக்கம் அவசியம் சார்.

மற்றொருமாணவன்:- சார் ஒரு சந்தேகம் சார்!

ஆசி:- என்னடா அது?

மாண:- தமிழ் புத்தகத்திலே முதல்லே கடவுள் வாழ்த்து இருக்கிறதே ஏன் சார்?

ஆசி:- டேய்மண்டு இந்நேரம் எங்கே கவனித்தாய். நாம் எந்த காரியத்தை துவக்கினாலும் அது இனிது முடிய கடவுளை வழிபட வேண்டும். நாம் தமிழ்பாடத்தை படிக்கத் துவக்குமுன் அதில் நன்கு படித்து தேர்ச்சியடைய கடவுள் அருள் வேண்டும். அதனால் முதலில் இறை வணக்கச் செய்யுள் வருகிறது.

மாண:- அது சரி சார். ஆங்கிலம் பூகோளம், சரித்திரம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் முதலில் கடவுள் வாழ்த்து ஒன்றும் வரவில்லையே சார், அது ஏன்?

ஆசி:- டேய்! இதெல்லாம் ஒரு சந்தேகமாடா? உட்கார் இனி இது மாதிரி கேள்விகளைக் கேட்காதே.

மாண:- சந்தேகப்பட்டுதான் சார் கேட்கிறேன்.

ஆசி:- சீ உட்காருடா. என்னைத் தனியாகக்கேள். சொல்லுகிறேன். இப்போது மேலே போவோம் டேய் காதர் தமிழணங்கு என் தலைப்பை உடைய செய்யுளைச் சொல்லு.

மாண:-

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும்
தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிட நற்றிரு நாடும்
அத்திலக வாசனை போல்
அனைத்துலகம் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த
பெருந் தமிழ் அணங்கே.

ஆசி:- இச்செய்யுளைப் பாடியது யார்?

மாண:- பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

ஆசி:- டேய் திராவிடமணி! இச் செய்யுளுக்கு பதவுரைக்கூறு.

திராவிடமணி:- கூறுகிறேன் சார் முதலில் ஒரு சந்தேகம்......

ஆசி:- என்னடா சந்தேகம்?

திரா:- "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிருநாடும்" இத் தொடரை சற்று விளக்குங்கள் சார்.

ஆசி:- சரி கவனி! தெக்கணமும்—தக்ஷிண பீடபூமியும்; அதிற்சிறந்த —அதிலே சிறந்து விளங்குகின்ற திராவிட : நல் திருநாடும்—நல்ல திராவிடத்திருநாடும்...

ஒரு மாணவன்:- "திராவிட நல் திருநாடும்" இதன் பொருள் என்ன சார். சற்று விளக்கிக் கூறுங்கள்.

ஆசி:- கவனி! நல் என்றால் நல்ல; திரு என்றால் அழகிய அல்லது மேன்மையான திராவிடநாடு என்றால் திராவிட மக்கள் வாழும் நாடு. அதாவது அழகிய சிறந்த திராவிட நாடு என்று பொருள்.

மாண:- அந்த திராவிடநாட்டின் எல்லைகள் என்ன சார்?

ஆசி:- தற்போதுள்ள சென்னை மாகாணந்தான். விந்தியமலைவரையி லும் திராவிடர்கள் வாழ்ந்ததாகவும் சிலர் கூறுவர்.

## 2 பூகோளவகுப்பு

ஆசி:- சரி டேய்! மானீடர்! இந்த இந்தியா படத்தை சுவற்றில்மாட்டு. (படம் சுவற்றில் மாட்டப்படுதல்)

ஆசி:- கோவிந்தா! இந்த பட திலே டில்லி எங்கே இருக்கிற காட்டு!

மாண:- (படத்தில் காட்டுதல்)

ஆசி:- சரி. லாகூர், அலாகாபா பம்பாய் இவைகளைக் காட்டு நீ போ அடுத்தவன் வாடா!

அடுத்த மாணவன்:- (அவ் களைக் காட்டுதல்)

ஆசி:- டேய் கோபால்! ஆம பாத், ஸ்ரீநகர் இவைகளைக் காட்டு

கோபால்:- (படத்தில் காட்டுத

ஆசி:- பெஷாவர், லக்னெ இவைகளைக் காட்டு. நீபோ அடு தவன்வா.

அடுத்தவன்:- (படத்தில் கா டுதல்)

ஒரு மாணவன்:- சார் எல்லா வடநாட்டிலே இருக்கிற நக களையே காட்டச் சொல்றீங்க சார்! நம் தென்னாட்டிலே......

ஆசி:- டேய் அவசரக் குடுக் எனக்குத் தெரியுண்டா உட்கா ஷரீப்! வங்காளமாகாணத்தை பட திலே காட்டு,

ஷரீப்:- எந்த வங்காளம் ச கிழக்கா, மேற்கா—

ஆசி:- அதென்னடா அது. கி கும், மேற்கும்!

ஷரீப்:- அப்படி அர்த்தமில் சார் மேற்கு வங்காளத்தை கிழக்கு வங்காளத்தையான்னு கே டேன் சார்.

ஆசி:- ஓ! சாயபு இல்லே நீ. உங்க வங்காளத்தைத்தான் காட்

ஷரீப்:- (காட்டுதல்)

ஒரு மாணவன்:- சார் ஒரு ச தேகம். கொஞ்சம் விளக்கவேணு சார்.

ஆசி:- என்ன சந்தேகம்?

மாண:- இந்த அட்லாஸ் 9-வது பக்கத்திலே ஒரு பெரிய ச தேகம் சார்.

ஆசி:- அதென்ன ஆட்லாஸ்ட

மாண:- ஆக்ஸ்பர்ட் அட்லா தான் சார்.

ஆசி:- கொண்டுவா இங்கே.

மாண:- இதோ சார் இந்த ஒ பதாவது பக்கத்திலே "முக் மனித ராசிகள்" என்று பெ

12-ம் பக்கம் பார்க்க

திராவிட முன்
ற்றக் கழகம்.
கள் மன்றம்
ந்தேகமில்லை,
மு. கழகத்
க்கு எங்கும்
ராதரவு—மாற்
ரும் கூறுவர்.

மு. கழகத்தின் கிளைகள் எங்
ம் தழைத்துள்ளன—உண்மை.
னினும் புள்ளி விபரம் கேட்கிறது,
ரிவு உலகம்.

பேராதரவு பெற்றுள்ள தி. மு.
வுக்கு மொத்த உறுப்பினர்
ண்ணிக்கை என்ன? — அரசியல்
லகு கேட்கிறது.

கூட்டத்தில் கூடி நிற்பர்,
காள்ளை கொள்ளையாக — உறுப்
னர் எவ்வளவு ஐயா! உறுப்பினர்
ட்டியலைக் காட்டு — என்றுதான்
வரும் கேட்பர். தி. மு. கழகம்,
ட்ட திட்டம் அமைத்துக்
காண்டுவிட்டது — இனியும், கட்
ப்பாடு இல்லாமல் கழகம் இருக்
க் கூடாது—இருக்க முடியாது.

உங்கள் ஊரிலே, எவ்வளவு
றுப்பினர், தி. மு. க. வுக்குஎன்று
கட்டால், முயற்சி எடுத்துக்
காண்டால் எத்தனையோ ஆயிரம்
றுப்பினர்களைச் சேர்க்க முடியும்,
ன்று கூறும் பதில், இனி தி. மு.
வில் இருத்தலாகாது. உறுப்
னர்களைப் பெருவாரியாகச்
சர்த்தாகவேண்டும்.

நமது முன்னுள்ள பிரச்னைகள்,
திகரித்துக் கொண்டுள்ளன.
வைகளைக் கடந்து வெற்றிப்
ாதையில் செல்ல, நமது உள்ளங்
ள் ஆர்வம் கொண்டிருந்தால் மட்
ம் போதாது—ஒவ்வொரு விநாடி
யும் கழகத்துக்காகச் செலவிட
வண்டும்.

கிளைக் கழகங்கள், தினசரி, பற்
ல இடங்களில் துவக்கப்படுவதா
ச் செய்திகள் காணுகிறேன்—
பருமிதங் கொள்கிறேன். அத்த
க் கிளைக் கழகங்களும், எஃகுக்
காட்டைகளாக வேண்டும்.

பல இடங்களிலிருந்து, கிளைக்
ழகக் கட்டிடத் திறப்புவிழா பற்றிய
ழைப்புகளும் அறிவிப்புகளும்,
லைமை நிலையத்துக்கு வந்திருக்கி
து. மகிழ்ச்சிக்குரிய செய்தி, இது.

# உறுப்பினர் சேர்க்கும் பணி

## பொதுச் செயலாளர் வேண்டுகோள்

ஒவ்வொரு கிளைக் கழகங்களும், தங்களுக்கென ஓரிடம் அமைத்துக் கொண்டு, பொதுமக்களின் இடைவிடா தொடர்போடு பணியாற்ற வேண்டும்.

கழகத் தலைமை நிலையத்திலிருந்து இன்றுவரை **30,000** (முப்பதாயிரம்) உறுப்பினர் ரசீதுகள், அனுப்பப்பட்டிருக்கின்றன —முக்கிய நகரங்களுக்கும், சில மாவட்டச் செயலாளர்களுக்கும். ஏனைய இடங்களுக்கு, தினசரி, அனுப்பும் வேலை நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

மாவட்டம், சிற்றூர், நகரம்—எங்கும் உறுப்பினர் சேர்க்கும் வேலை வேகமாக நடைபெறுதல் வேண்டும். மார்ச்சு மாதத்தின் வேலைத் திட்டமாக, இதைக் கருதவேண்டும்—நாம். ஏப்ரல் முதல் வாரத்தில் எல்லாக் கிளைக் கழகங்களுக்கும், புது சட்டதிட்டப்படி நிர்வாகிகள் தேர்தல் நடத்தப்பெற வேண்டும்.

'பாசறை அமைகிறது—பணி நடைபெறுகிறது—இனி உரிமைக் கிளர்ச்சியை' ஒழிக்க முடியாது என்று ஆதிக்கக்காரனும் கூறியாக வேண்டிய நிலையைக் காணவேண்டுமானால், நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை, மாநாடுகளின் எண்ணிக்கை ஆகியவைகளைக் காட்டினால், போதாது—கண் சிமிட்டியபடி அரசியல் உலகு கேட்கும், உறுப்பினர் எவ்வளவு?—எங்கே புள்ளி விபரம் என்று.

தி. மு. க. தலை நிமிர்ந்து நின்று இதற்கு பதில் கூறவேண்டும்—பட்டியலைக் காட்டவேண்டும்.

தனி நாடு கேட்கிறோம், தோழர்களே! தனி நாடு கேட்கிறோம்!!—அதை ஆதரிக்கும் உறுப்பினரின் எண்ணிக்கை எவ்வளவு என்றுதான் அரசியல் உலகு கேட்கும்.

இந்த முக்கிய ஆக்க வேலைகளில் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கிளைக் கழகங்கள் எல்லோரது கவனமும் கவலையும் செலுத்தப்பட வேண்டும்.

முப்பதினாயிரம் ரசீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன — இரண்டு வாரங்களில். இன்னும் பதில் கிடைக்கவில்லை. எல்லாவற்றையும் சேர்த்தே அனுப்பவேண்டும்என்றிருத்தல் வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். சேரச்சேர, அனுப்பிக்கொண்டேயிருங்கள் — கட்டணத்தோடு. அடிக்கடி கழகத் தலைமை நிலையத்துடன், கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளுங்கள்.

பொதுக்குழு முடிவுப்படி, உறுப்பினர் கட்டணம் எட்டணாவையும், தலைமை நிலையத்துக்கு அனுப்பி வையுங்கள். கழக சட்டதிட்டப்படி தலைமைக் காரியாலயம், மாவட்டம், வட்டம், சிற்றூர் அமைப்புகளுக்குச்சேரவேண்டிய பங்கு தொகை, இங்கிருந்தே, அனுப்பப்பட்டுவிடும்.

புதிய பொறுப்புகள் — புதிய பாதை—புதியமுயற்சி — புதுயுகம் காணும் உளம்படைத்தோரே, புறப்படுங்கள்! தி. மு. க. கட்டுக்கோப்பான ஸ்தாபனம், என்று மலர்ந்திடச் செய்வோம். குடும்பங் குடும்பமாக உறுப்பினர்களைச் சேருங்கள்.

தாயகத்தின் விடுதலைக்குநம்மைத் தக்கோர் ஆக்கிக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் இது — வளர்ந்து நிற்கிறோம் — இந்த வளர்ச்சியை வகைப்படுத்த வேண்டாமா? வாலிபர்களே, மாணவர்களே, தாய்மாரே—நமது கொள்கைகள் வெற்றி பெற, குடும்பம் குடும்பமாகச் செல்லுங்கள்—உறுப்பினர்களைச் சேருங்கள்! உறுப்பினர்களைச் சேருங்கள்!!

அன்பன்,

**அண்ணாதுரை.**

திராவிடநாடு

காஞ்சி] 2—3—52 [ஞாயிறு

# மொழிப் போராட்டம்

★

செங்குருதி சிந்திய தேசாபிமானிகளைப் பெற்றெடுத்த கீழ் வங்கத்தின் மணல், கடந்த சில தினங்களாக, சிவப்பு மயமாகிறது எனும் செய்திகளைக் கேள்வியுற்றோம் — சிந்தை நொந்தோம். இந்திய தீபகற்பத்தின் அரசியல் வரலாற்றில், இரத்தக் கறை படிந்த பல சம்பவங்களை ஏந்திய பெருமை கொண்ட வங்க மாதாவின், 'எதிர்கால உலகம்' இரத்தக் குளத்தில் மிதந்ததாம். கல்லூரி மாணவர்களின் குருதி கொட்டிற்றும்—தியாக பூமியில், தாய்மொழிக் கேற்பட்ட இழிநிலை போக்க, குமுறும் கடலென எழுந்த மாணவருலகு-தடியடிக்கும் துப்பாக்கிக்கும் இரையாயிற்றும்— இளைஞர் உலகிலே எழும்பிய, இந்த வீரப் போராட்டத்தால் 'கங்கைக் கரை சிவந்தது' எனும் செய்திகள் எட்ட எட்ட பதைத்துப் போனோம்.

மாணவருலகு, வைத்த தீ, வளர்ந்து விட்டதாம், அங்கு— பிப். 21ந் தேதி டாக்கா நகரில், எழுந்த, வீர முழக்கம், கிழக்கு பாகிஸ்தானெங்கும் ஒலிக்கத் துவங்கியிருக்கிறது. அதனால்,

12 பேர் செத்தனர்
150 பேருக்குக் காயம்
பேராசிரியர்கள் கைது
எம். எல். ஏக்கள் கைது.
ராணுவத்தினர் அட்டகாசம்.

இத்தனையும், கிழக்கு வங்கத்திலே, சின்னாட்களுக்குள் நிகழ்ந்திருக்கின்றன. கடைகளிலே ஹர்த்தால்— டாக்கா பல்கலைக் கழகம் மூடப்பட்டது—மாணவர்கள் 28 பேர் கைது — ஒவ்வொரு அறையிலும் புகுந்தனர் போலீசார்—முஸ்லீம் லீக் காரியதரிசி கைது—பத்திரிகாசிரியர்கள் சிறைக்குள் — ராணுவம் ரோந்து வருகிறது—144! ஊரடங்குச் சட்டம்!! — இத்தனை நிகழ்ச்சிகள், கிழக்கு பாகிஸ்தானில்.

சிந்தையில் கொட்டும் தேள் போல செய்திகள் இத்தனையும், வங்க மொழிக்காக, நடைபெற்றிருக்கின்றன.

வளமும் வாழ்வும் பெற்றுத் திகழும் வங்க மொழிக்காக, கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. வங்க மொழி வளர்த்த தேசீய வீரம், இலக்கிய உலகுக்கு அளித்திருக்கும் செல்வம், வளர்த்துத் தந்த கவிஞர்கள், ஏராளம்—தாய்மொழி பற்றுக்கொண்ட, தனையர்களைத் தாங்கியிருக்கும், சமவெளி, இது. அங்கே இத்தனை கோரங்கள்! இவ்வளவு அடாபிடி! 12 உயிர்கள்! படை பவனி! குண்டு முழக்கம்!

இத்தனையும் எதற்காக? மொழியைக் காக்கப் புறப்பட்டோரைத் தடுக்க! வேண்டாத ஒன்றை பொது மக்கள் மீது—திணிக்க! பாகிஸ்தான் அரசாங்கம், சர்க்கார் மொழியாக உருதுவைப் பிரகடனப் படுத்தியது — முன்பு. இந்த முடிவு பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில செய்யப்பட்ட நாள் முதல், கீழ் வங்கம், குமுறிக் கொண்டேயிருந்தது.

உருதுவைப் போல, தமது வங்காளி மொழியும் சர்க்கார் மொழியாக்கப்படவேண்டும் என கோரினர். தமது தாய்மொழிக்கும் சம அந்தஸ்த்து வேண்டுமென வேண்டினர். பாகிஸ்தான் மக்கள் தொகையில், மூன்றில் இரண்டு பங்கு பேர், பேசும் மொழி — வங்கமாகும். ஆனால், 'கராச்சி' இவர்கள் கோரிக்கையை ஏற்கவில்லை.

இந்த நடவடிக்கையை எதிர்க்க வேண்டும்எனவங்கமாணவர்கள் புலி போலெழுந்தனர்! "வங்கமொழிக்கு வரும் ஆபத்து இது. வங்கமொழியையும், அரசாங்க மொழியாக்க வேண்டும்" என்ற கோரிக்கையோடு கிளம்பினர். தமது உரிமையை நிலை நாட்ட, பல்கலைக் கழகத்திலே, வேலை நிறுத்தமும் — கல்லூரிகளிலே முரசொலியும் எழும்பிற்று. இந்த மொழிப் போராட்டம் முகிழ்த்ததும், தாய்மொழிக்கேற்படும் அவமானத்தைத் தவிர்க்க,

பேராசிரியர்கள்
எம். எல். ஏக்கள்
பல்கலைக் கழகத்தார்
டாக்கா வக்கீல்கள்
போது மக்கள்
வியாபாரிகள்

எல்லோரும், கூட்டாகத் திரண்[டனர்]. பல முஸ்லீம் லீக் பிரமு[கர்]களும், நேரிடையாகப் பங்குகொண்டனர். தீ பரவிற்று—கடைகள் மூடப்பட்டன — கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை —'வங்க மொழியை தாழ்த்தாதே' என்[ற] முழக்கங்கள் எழும்பலாயின.

இந்த மொழிப் போராட்டம் வேண்டுமென்றே துவக்கப்பட்[ட]தென, எவரும் கூறமுடியாது. யாரோ சிலர் வெறுப்பால் கிளப்[பி] விட்ட புயல் என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் கீழ் வங்க[ம்] முழுமையும் கட்சி பேதமின்றி இ[க்] கண்டனக் கிளர்ச்சியில் கலந்து கொண்டனர்.

கீழ் வங்கத்தின் மொத்த மக்கள் தொகை ஆறு கோடி. இதில், வங்க மொழி பேசுவோர், நான்கு கோடி மிகப் பெரும்பான்மையோரின் தாய் மொழியை உதாசீனம் செய்தால், எவரே தாங்க முடியும் அதை? அதிலும் மொழியை தாயெனப் போற்றும் தனயர் தயங்குவர்!

இந்த உரிமையுணர்ச்சியை மதி யாது அலட்சியத்தோடு நோக்கி னார்—கீழ் வங்கப் பிரதமர் நூருல் அமீன். இதன் விளைவாக கிளர்ச்சி வலுத்தது—எங்கும் மாணவ படை திரண்டது. புயலென வ[ரு]ரும் மொழிப் போராட்டத்தை ஒடுக்க, ராணுவப் படைகளையும் துப்பாக்கிகளையும் நம்பியது—கீழ் பாகிஸ்தான் சர்க்கார். பிப், 21ந் தேதி, அலைகடலென எழுந்துவந்த மாணவர் கிளர்ச்சி ஊர்வலத்தின் மீது, துப்பாக்கியைக் காட்டிற்று— பிணங்கள் 12! மரணப் படுக்கையில் 150 பேர் வீழலாயினர்.

இவ்வளவு ரசாபாசத்துக்கும் பின், இன்னும் அமைதி ஏற்பட வில்லையாம். கைதுகளும்—144ம்— ராணுவ ரோந்தும் நடைபெற்றுக் கொண்டுள்ளனவாம்.

ரத்தமும் குண்டுகளும் விழுந்[து] சிதறியபின், கீழ்பாகிஸ்தான் சட்[ட] சபையினர், மக்கள் கோரிக்கை...

ஏற்று 'வங்காளி மொழி சர்க்கார் மொழியாக்கப் படவேண்டும்' என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பியுள்ளார்களாம்.

வேதனைக்குப்பின் ஏற்பட்ட இம் முடிவு, வரவேற்கக் கூடியதுதான்.

மொழிப் போராட்டம், எதேச்சாதிகார வெறியை, எதிர்ப்பதாகும். "வங்க மொழி மதிக்கப்பட வேண்டும்" என, கிழக்கு வங்கத்திலே, திரண்டெழுந்தோரில், காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள்—சிறைக்குள் பூட்டப்பட்டிருக்கும் ஐந்து எம். எல். ஏக்களும் காங்கிரசார்தான். தாய் மொழியை எதிர்த்து, வரும் மற்றோர் மொழியின் ஆதிக்கத்தைத் தடுக்க, அவர்கள் தியாகம் புரிகிறார்கள். ஆனால் இங்கு! நமது சென்னையில் — இன்பத் தமிழகத்தில்!! "இந்தி"க்கு ஆதரவு தரும், இங்குள்ள தேசியத் தோழர்களுக்கு, கீழ்வங்கத்தைக் காட்டுகிறோம் — அங்கே மொழிக்காக சிந்தப்பட்ட இரத்தத் துளிகளைப்பாருங்கள்—கறைபடிந்த ஆடைகள் அங்கேயிருக்கின்றன—தாய் மொழிக்காக தியாகம் புரியும் தீரர்களைப்பாருங்கள்!

மொழிப் போராட்டம், எங்கும் எழும்பும் — வளமிக்க மொழியை அடிமையாக்கி, வேண்டாத மொழியைப் பொதுவாக்கும் முயற்சி, பலிக்காதென்பதை, 'கீழ்வங்கம்' செப்புகிறது.

தாய்மொழிக்காக கிளர்ச்சி செய்து, உயிரைத் துறந்த அந்த உத்தம இளைஞர்களின் தியாகத்தை நாம் போற்றுகிறோம். மாணவமணிகள் மூட்டிவிட்ட தீ, இன்று மகத்தான உரு வெடுத்திருக்கிறது. வீதிகளிலே வீழ்ந்த அந்த வீரப்புதல்வர்கள், வங்கத் தாயின் பெருமைக்காகத் தம்மைத் தத்தம் செய்திருக்கின்றனர். தமது தாய்மொழிக்காக, வீரப போராட்டம் நடத்தி, அவர்கள் சிந்திய இரத்தம் வீண்போகாது என நம்புகிறோம்.

உரிமைக்குரலை மதித்து, பாகிஸ்தான் சர்க்கார் நடக்கவேண்டுமென விரும்புகிறோம். இந்திய சர்க்காரைப்போன்ற, எதேச்சாதிகார வெறிக்கு, ஆளாகாது, தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் — பாகிஸ்தான் சர்க்கார். எவ்வளவோ பாடுபட்டு தாம்பெற்றதனிநாட்டை, எதேச்சாதிகாரவெறிக்கு ஆட்படுத்தும் நோக்கம், அவர்களுக்கும் அரும்புவது, ஆபத்தாகும.

ஆகவே, பொறுப்புணர்ச்சியோடு, காரச்சியினர் நடக்க வேண்டுமென விரும்புகிறோம். மொழிப் போராட்டத்தால் கங்கை மண் சிவந்தது— ஒரு களங்கமாகும்!

கீழ்வங்க மக்கள், பாகிஸ்தான் பிரிவினையை ஏற்று, புது நாட்டின் பொலிவுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருப்போராகும். அவரெல்லாம், பாகிஸ்தான் மலர்ந்தபோது மகிழ்ந்தனர்—தமது சமுதாயத்துக்கென ஒரு தனிநாடு கிடைத்து விட்டது என்பதால். அவ்வளவு மகிழ்ச்சியும் மலர்ச்சியும் கொண்ட மக்களிடையில், தமது சர்க்காரையே எதிர்க்க வேண்டிய நிலை வளர்ந்ததென்றால், தாய் மொழிபற்று, இளைஞர்களின் நரம்பு நாதமாக இருப்பதுதான்.

இந்த உண்மையை காரச்சியினர் உணராததன் விளைவுதான், இப்போது விளைந்த மொழிப்போராட்டம். இதுபோன்ற களங்க நிகழ்ச்சிகள் — ஏற்படுதல், நல்லாட்சிக்கு ஏற்றதல்ல.

இதை, உணரவேண்டும்—மொழி ஆதிக்கத்தைப் பரப்பலாம் எனக் கனவு காணுவோர். தாய்மொழியை இழக்க எவரும் மனமிசையார்! தாய்மொழியைத் தாழ்த்தும் மனப்பான்மையை மாணவருலகம் அனுமதிக்காது! இந்த உண்மையை கீழ்வங்கத்தைக் கண்டு உணரவேண்டும் — பாகிஸ்தானும், இந்துஸ்தானும். கீழ் வங்கம், தரும், பாடம் இடம்தான்.

✲

## இலங்கை தி. மு. க.

இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் முதல் மாநாடு விரைவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி மாநாட்டுக்கென வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டு விட்டது. கழக முன்னணி வீரர்கள் மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன் ஆகியோரை அழைப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது என மாநாட்டுச் செயலாளர் ம. அ. அந்தோணி முத்து அறிவிக்கிறார்.

## அதுவும் இதுவும்!

—

லண்டன் பிப் 25:- சூரியனை சந்திரன் மூன்று நிமிஷ நேரம் அடியோடு மறைத்ததையும், 9000 மைல் நீளம் 85மைல் அகலத்துக்கு இருள் பரவியதையும் சூடானில் பத்து விஞ்ஞானிகள் கண்டனர். இந்த சூரியகிரகணம்பற்றி போட்டோக்கள் எடுக்கப்பட்டன. இதனால் பல ஆராய்ச்சிகள் செய்யலாமென்றும், அநேக அரிய உண்மைகள் பெறலாமென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்தியாவில்!:- சூரிய கிரகணத்தையொட்டி லட்சோபலட்சம் மக்கள் பிரார்த்தனை புரிந்து தீர்த்தமாடினர். குருக்ஷேத்திரத்தில் 5 லட்சத்திற்கு மேற்பட்ட யாத்ரீகள் புனித நீராடினர்.

## பாராட்டு விழா

தி. மு. க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற M. L. A;
M. P-க்களுக்கு பாராட்டுக் கூட்டம்,
**4—3—52 செவ்வாய் மாலை 5-மணி**
**சென்னை: செயின்ட்ஸ்மேரி மண்டபத்தில்**
நடைபெறும். மேற்படி பாராட்டு விழாவிற்கு,
தி. மு. க. பொதுச் செயலாளர்
**அண்ணாதுரை**
தலைமை வகிப்பார்.

தி. மு. க.

# கவர்னர் நியமனம்

வெள்ளையன் தன் கையில் சிக்கிய இந்திய உபகண்டத்தை ஆள, தனது நாட்டிலிருந்து பலரை அனுப்பினான், வைஸ்ராயாகவும், கவர்னர் ஜனரலாகவும்.

அதைப்போல, தென்னாட்டு ஆட்சியை நிர்வகிக்க, தன்னைச் சேர்ந்தோரை, கவர்னராக அனுப்பி வருகிறது, வடநாட்டு சர்க்கார்.

தங்களது ஆதிபத்யம் நிலைநாட்டப்பட, வெள்ளையருக்கு தமது பிரபுக்களும், நண்பர்களும் தேவைபபட்டனர்.

தமது பிடியை வலுப்படுத்த, வடநாட்டினருக்கு, தமது சகாக்களும், நண்பர்களும் தேவைப்படுகின்றனர்.

இந்த உண்மையை நிலைநாட்டுவதுபோல, சென்னைமாகாணத்தின் கவர்னராக ஸ்ரீபிரகாசா என்பவர், வரும் மார்ச்சு 12-ந் தேதியன்று பதவியேற்கப் போகிறாராம்.

ஸ்ரீபிரகாசா, இப்போது டில்லி சர்க்காரில் மந்திரியாக இருந்து வருபவர். அவரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிட்ட பத்திரிகைகள் தெரிவித்திருப்பது:-

ஸ்ரீபிரகாசாவும்—நேருவும் அந்தரங்க நண்பர்கள் — 'இருவரும் லண்டன் காம்பிரிட்ஜ் கல்லூரியில் படித்தவர்கள்' என்பவையாகும்.

நேருவின் அத்யந்த நண்பர்கள் என்று, இன்று காங்கிரஸ் இயக்கத்திலிருப்போரில், ஸ்ரீபிரகாசாவும் ஒருவர். அதுமட்டுமல்ல, நேருவின் வார்த்தையை சிரமேற்கொண்டு நடபபவர் என்றும் கேள்வியுறுகிறோம். அதை, ஸ்ரீபிரகாசாவே வெளியிட்டிருக்கிறார். "இந்த நேரத்தில் என்னை கவர்னராகப் போகும்படி நேரு சொல்கிறார். நான் அதை ஏற்காமல், என்ன செய்யமுடியும்?" என்பதாக.

நேருவின் நண்பர்—அவர் கட்டளைப்படி நடப்பவர் என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தபிரமுகரும் ஆவார் ஸ்ரீபிரகாசா.

இவரை, சென்னைக்கு கவர்னராக ஆக்கியிருக்கிறது — டில்லி பீடம். பழைய கவர்னர் பவநகர், செல்லப் போகிறார் — அவரது இடம் இவரால் நிரப்பப்படுகிறது.

சென்னை — இன்றுள்ள சூழ்நிலை எல்லோரும் அறிந்ததாகும். காங்கிரஸ் வாதிகள் மந்திரிசபை அமைக்க மெஜாரிடியில்லாமல் திண்டாடுகிறார்கள் — சாங்கிரசல்லாதோரோ, சர்க்கார் அமைக்க வேண்டுமென்று முயன்று கொண்டுள்ளனர். இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் வருகிறார், கவர்னராக!

காங்கிரஸ் முகத்தில் மக்கள் கரி பூசிவிட்ட நேரத்தில். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரே நமது நாட்டின்—ஆட்சித்தலைவராம்; நிர்வாகச் சூத்ரதாரியாம்.

வஞ்சகனும் துணியான், இச்செயலுக்கு. ஆனால் நமது டில்லி பீடம், துணிந்து செய்கிறது 'காங்கிரஸ் வேண்டாம்' என்று கூறிவிட்ட இடத்திற்கு — காங்கிரஸ் மந்திரிசபை ஏற்படுமோ, ஏற்படாதோ என்கிற ஐயம் பரவியிருக்கிற நேரத்தில் — இத்தகைய ஒருவர், கவர்னராக்கப்படுவதென்றால்!

அதிலும் நம்முடைய உரிமைக் கோரிக்கை வளர்ந்து வருகிற நேரம் இது—இந்த நேரத்தில் நேருவின் சகா, காங்கிரஸ் பிரமுகர், கவர்னராக வருகிறார்!!

ஏதோ, திட்டமிட்ட, சூதெண்ணத்தோடே, டில்லி ஸ்ரீபிரகாசாவைக் கவர்னராக்கியிருக்கலாம் என்று, பரவிக்கிடக்கும் செய்தியை நாமும் நம்ப வேண்டியவராகிறோம்.

"தனக்கு வேண்டியவர்களையே சென்னை மாகாணத்துக்கு கவர்னராக்க வேண்டும்" என்பதே நேருவின் ஆசையென்பதை விளக்க, இன்னும் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். பவநகர் விலகப் போவதாகத் தெரிவித்ததும், பம்பாயைச் சேர்ந்த பி. ஜி கேர் என்பவரைக் கேட்டனர்—ஒத்து கொள்ளுமாறு. அவரும், நேருவின் உற்ற நண்பராகும். அவர் மறுக்கவே, தமது அருகிலிருக்கும் ஸ்ரீபிரகாசாவை அனுப்புகிறார், நேரு.

கவர்னர் பதவியென்றால் லட்சக்கணக்கான ரூபாய்களை, அலவன்சாகவும், சம்பளமாகவும் அனுபவிக்கக்கூடியதாகும். ஆண்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கப்படும் இந்த ரூபாய்கள், நாம் செலுத்தும் வரிப் பணத்தில் தான் செலவிடப்படுகின்றன.

சென்னைக்கென ஒரு மந்திரி சபையும் சர்க்காரும் இருக்கும் போது, கவர்னர் ஏனோ—அதுவும் அங்கிருந்து வரவேண்டும்? நாமே அதையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமே! அதைவிட்டு, டில்லி, ஒருவரை அனுப்பவும், அவர் நமது ஆட்சிக்குத் தலைவராக இருக்க வேண்டிய அவசியம்தான் என்ன?

இவைகளை சிந்தித்துப்பார்த்தால் டில்லியின் ஆசை விளங்கும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தன்பிரதிநிதிகளைக்கொண்டே, பலநாடுகளை அடிமைப்பிடியில் கிடக்கச் செய்தது போல, டில்லியும் செய்கிறது!டில்லி சாம்ராஜ்யத்துக்காக வடநாடு, பாடுபடுகிறது!!

அதனால்தான் நெருக்கடியும் விடுதலை வேட்கையும் நிறைந்துள்ள இந்த சமயத்தில் தனது சகாவை—கட்சிக்காரரை — நேரு தர்பார் அனுப்புகிறது, இங்கு. இந்த உண்மையை, நாம் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

## கன்னையா

நாகர்கோவில் தோழர் கன்னையாவின், மரணதண்டனை, மலேய சுல்தானால் ரத்து செய்யப்பட்டசெய்தி அறிந்து மகிழ்கிறோம். தோட்டத் தொழிலாளியாக மலேயக்காடுகளில் துயரமனுபவிக்கும் அவரை பயங்கரவாதி யெனப் பட்டம் சூட்டி, மலேய சர்க்கார் கைது செய்ததையும், பிறகு தூக்கு தண்டனை தரப்பட்டதையும், இக்கொடுமையை எதிர்த்து இங்குள்ள முற்போக்கு சக்திகள் கண்டனக் குரல் எழுப்பியதையும் நாடு அறியும். இவருடைய மரணதண்டனை ரத்து செய்யபட வேண்டுமென நமது மாநில மாநாட்டிலும் தீர்மானமூலம் கோரினோம். நமது ஆசை நிறைவேறியதற்காக மகிழும் இந்த நேரத்தில், மலேய சர்க்காரின் மற்றொரு போக்கைக் காண வருந்துகிறோம். தூக்குத்தண்டனையிலிருந்து தோழரை, ஐந்து வருட சிறைவாசத்துக்கு அனுப்பியுள்ளனர்—விடுதலைசெய்யவில்லை. இந்த அடக்கு முறையை எதிர்த்து, கன்னையாவுக்கு பூரண விடுதலை வாங்கித்தருவதற்கான முயற்சிகளை இந்திய சர்க்கார் மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்துகிறோம்.

# நல்லதல்ல

சென்னை மாநிலத்தில், இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலை குறித்து. உலகமுழுமையும், கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது.

பிற்போக்காளரிடை கலக்கமும் முற்போக்குச் சக்திகள்வசம் தீவிரமும் மலர்ந்திருக்கிறது, தேர்தல் முடிவுகளால்.

பணதிபத்யத்தின் பிம்பமான காங்கிரசின் சரிவு, புதுமை வேகத்துக்குக் கிடைத்திருக்கும் வெற்றியென்றே—கருதுவர், நாடு புதுமை பெறவேண்டுமெனும் தாகங்கொண்டோர்.

ஆட்சி பீடத்திலமர்ந்து வெறியாட்டம் ஆட காங்கிரசை இனி அனுமதிக்கக்கூடாது, என்றே ஆர்வங்கொள்வர்—முற்போக்குக் கொள்கைகள் பேசும் எவரும்.

தோட்டத்திலே ஏற்பட்ட புற்று இடிக்கப்பட்டால்தான், பாம்புகள் கொட்டம் அடங்கும்—தோட்டத்தையும் சோலையாக்கமுடியும். அதற்குப்பதில், "பாம்புப்புற்று இருந்தாலும் பரவாயில்லை! இடிக்கப்படுவதைப்பற்றியும் கவலையில்லை! எல்லாம் இரண்டும்பொதுவானதே!' என்று யாராவது சொன்னால், எரிச்சலைத்தான் ஊட்டும், எவருக்கும்.

இந்த சமரச ஞானம் போதிப்போர், சங்கராச்சாரியாராகவோ, சனாதன வேத விற்பன்னராகவோ இருந்தால், 'தள்ளு குப்பையை' என்று கூறிவிடலாம்.

ஆனால், சமதர்மிகள் பேசுகிறார்கள்—சமரச ஞானம்! சமதர்மிகளெனக்கூறி வரும், இந்திய சோஷியலிஸ்டுகள் கூறுகிறார்கள்!

இந்த வாரம் சென்னையில் கூடிக்கலந்த சோஷியலிஸ்டு கட்சி நிர்வாகிகள், இத்தகைய முடிவையே வெளியிட்டிருக்கிறார்கள்.

காங்கிரசை எதிர்த்து அமைக்கப்படும் கூட்டு முன்னணியிலே சேர மாட்டோம்.

காங்கிரசிலும் சேரப்போவதில்லை.

இந்த முக்கியமான கட்டத்தில், கொஞ்சம் முற்போக்கோடு, நிகழ்ச்சிகளை நோக்கி முடிவு செய்வர், என எதிர்பார்த்தோம். ஆனால், "வழக்கம்போலவே" — நடந்து கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியின் கேடுகளைப் பற்றி, சோஷியலிஸ்டுகளும். பேசினார்கள்—தேர்தலின்போது. 'இத்தகைய காங்கிரசு ஆட்சியையோ, நாம் அனுமதிப்பது?' என்று கேட்கப்பட்டது, அவர்தம் தலைவர்களால். சிற்சில இடங்களில், சோஷியலிஸ்டுகளும், 144-க்கும் சிறைக்கும் ஆளாயினர், காங்கிரஸ் அடக்குமுறையால்.

அந்த அடக்கு முறைகளைக் காட்டி, பொதுமேடைகளில், கேட்டார்கள்—மக்களைப்பார்த்து. 'காங்கிரஸ் ஒழியவேண்டும் — எமக்கு வோட்டு தாருங்கள்!" என்று.

அப்படி வோட்டுக் கேட்டு, சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் எதிர்பார்த்த அளவு இல்லையென்றாலும் — 13 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த 13 ஸ்தானங்களிலும் வாக்களித்த மக்கள், காங்கிரஸ் ஒழிய வேண்டும், என்ற ஆசையோடுதான் வோட்டுப் போட்டிருக்கிறார்கள். ஆனால், சோஷியலிஸ்டு கமிட்டி முடிவு செய்திருக்கிறது — காங்கிரசுக்கு எதிராகச் செய்யப்படும் 'கூட்டு முன்னணியில் சேரமாட்டோம்' என்பதாக.

* * *

சோஷியலிஸ்டு தலைவர்கள் கூட்டம் நடைபெறுவதற்கு முதல் தினம் கம்யூனிஸ்டுத் தலைவரான தோழர் டாங்கே, சோஷியலிஸ்டுத் தலைவரான, தோழர் ஜெயப்பிரகாஷ்நாராயணனுக்கு, வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கின்றார்—கூட்டு முயற்சியில் சோஷியலிஸ்டுகளும் பங்குகொள்ள வேண்டுமெனக் கோரி, அதற்கு ஜயப்பிரகாஷ் தந்திருக்கும் பதிலில், 'எங்கள் நிலையில் மாற்றம் ஏற்படாது. எப்போதும் போன்றதுதான்' என்று தெரிவித்திருக்கிறார்.

எப்போதும் போன்றதுதான்! — தெரிவித்திருக்கிறது, சோஷியலிஸ்டு கட்சி. எப்போதும்—இவர்கள், எப்படி நடந்து வருகிறார்களென்பதை, மக்கள் மன்றம் தெரிந்துகொள்ளாமலில்லை.

காங்கிரஸ் கூடாரத்தை விட்டு, சோஷியலிஸ்டுகள் வெளியேறிய நேரத்தில், காங்கிரஸ் பாசிசத்தை எதிர்த்து மலரும் இப்புதுக் கட்சி என்றே பலர் கருதினர். சோஷியலிஸ்டு தலைவர்களில் சிலர்கூட, அப்படித்தான் கருதினா — கூறினர். வடநாட்டில் காங்கிரசுக்கு அடுத்தபடியாக இருக்கும் பலதரப்பட்ட கட்சிகள், பிற்போக்காளரின் பிடியில் சிக்கியமையால், முற்போக்குக் கொள்கைகளைக் கூறும் சோஷியலிஸ்டு கட்சி முக்கிய இடம் பெறலாம் என்றே கருதப்பட்டது. கம்யூனிஸ்டுக்கட்சி தடைக்குள்ளான போது—சுதந்திரமாக உலவும் நிலையில்தான் இருந்தது, சோஷியலிஸ்டு கட்சி. எனினும், எதிர்பார்த்த அளவு — மக்கள் மன்றத்தின் கவனத்தைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. காரணமென்ன? சோஷியலிஸ்டுகளை ஆதரிக்க பத்திரிகைகள் இல்லாமலில்லை — காங்கிரசை விட்டு வெளியேறியவர்கள் என்ற காரணத்தால், காங்கிரசைச் சார்ந்திருந்தோர் அனுதாபமும் கிடைத்திருந்தது. ஆனால், என்ன ஆயிற்று? கட்சிக்குள்ளேயே பூசலும், அருணதலைமையில் மற்றோர் கட்சியும், ஏற்பட்டிருக்கிறதேயொழிய எதிர்பார்த்தது, ஏன், நடக்கவில்லை!

இந்த விளைவை, சோஷியலிஸ்டு நண்பர்கள் — குறிப்பாக தென்னாட்டுப் பிரிவினர் — கூர்ந்து கவனிக்கவேண்டும்.

சோஷியலிசக் கொள்கை ஒரு கையிலும், ரமணரிஷி பக்திப்பிரவாகம் உளத்திலும், உலவியதுதான் என்று, நாம் காரணங்காட்ட விரும்பவில்லை. ஜயப்பிரகாஷ் போன்ற தனிப்பட்ட தலைவரைவிட அவர்கள் ஏந்திய சோஷியலிஸ்டு கொள்கைகள், பலம் வாய்ந்தவைதான். இருந்தும் பலனைக் காணவில்லையென்றால், அதற்குள்ள முக்கிய காரணம், சோஷியலிஸ்டுகளைப் பற்றி, மக்கள் கொண்டிருக்கும் கருத்துதான்.

இருமனம் படைத்தோர்!—காங்கிரசின் நண்பர்கள் — எவ்வளவு பேசினாலும், சமயம் வரும்போது காங்கிரஸ்பக்கமே நிற்பார்கள் — காங்கிரசின் மற்றொரு பதிப்பே 'சோஷியலிஸ்டு' கட்சி—ஜெயப்பிரகாஷும் நேருவும் அந்தரங்க நண்பர்கள் — இதுபோல மக்கள் மன்றத்தில், பல கருத்துகள், பரவிக் கிடக்கின்றன.

இந்தக் கருத்தைப் பலமூட்டுவதுபோல, தோழர் ஜெயப்பிரகாஷ் அவர்களும், நடந்துவந்திருக்கிறார் 'ரயில்வே ஸ்டிரைக்!' என்றொரு முழக்கம் வரும் 'நேருவைச் சந்தித்தார் ஜே. பி. என்றொரு செய்தி தொடரும்—'சமரசம்காண முடிவு. ஸ்டிரைக் நடக்காது'—இப்படி செய்திகள் பறக்கும்.

இவைகளின் உண்மைகள் எந்தவகையனவாயிருந்தாலும், இதனாலேற்பட்ட பலன், மக்கள் மன்றம் இவர்களைப்பற்றி சந்தேகம் கொள்ளும்படி ஆனதுதான்.

இந்த உண்மையைத் தென்னாட்டில் வதியும் அவர்தம் கட்சியினர் எவரும்—மறுக்க முடியாது.

இப்போது இந்த எண்ணத்துக்கு வலிவு தருவது போல முடிவு செய்திருக்கிறார்கள் — சோஷியலிஸ்டு கட்சியினர்.

காங்கிரசுக்கெதிராக—ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சியை நடைபெறச் செய்ய வேண்டும் என்று பலதரப்பட்ட கட்சிகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அந்தக் கட்சிகளின் கொள்கைகளில்—வித்தியாசம் இருந்தாலும், அவர்கள் ஒரே நோக்கத்துக்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

"காங்கிரசுக்கு மக்களிடத்தில் விருப்பமில்லை. காங்கிரசாட்சி ஒழியும் என்று ஆவலிலேயே மக்கள் ஆசையை நிறைவேற்றவேண்டும்"

என்ற, கருத்தை, எல்லோரும் உணர்ந்த காரணத்தால், கட்சிமாச்சரியங்களிருந்தாலும், எல்லோரும் கூடி குறைந்தபட்ச திட்டமொன்றை அமைத்துக்கொண்டு, கூட்டு சர்க்கார் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால், காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறிவந்த சோஷியலிஸ்டு கட்சியினரோ, இந்த கூட்டு முயற்சியில் பங்கேற்கமாட்டோமென, கூறுகின்றனர்.

ஏன் பங்கேற்க மாட்டோம் என்று, விளக்கும்போது, சோஷியலிஸ்டு பிரமுகர்களில் ஒருவரான—சாதாரணமானவரல்ல!— விஜய நகரம் ராஜா கூறியிருக்கிறார்—"இந்த கம்யூனிஸ்டுகளின் முயற்சிக்கு ஒத்துழைக்க மாட்டோம். கம்யூனிஸ்டுகளோடு சேருவாயா அல்லது காங்கிரசாரோடு ஒத்துழைப்பாயா என்று யாராவது கேட்டால், நாங்கள் காங்கிரசையே தேர்ந்தெடுப்போம்" என்பதாக. விளக்கத்தைப் பாருங்கள்! கம்யூனிஸ்டு கட்சியைவிட காங்கிரசில் எந்த முற்போக்கு எண்ணம் முகிழ்ந்து கிடக்கிறதோ, அவரைத்தான் கேட்கவேண்டும்!

சோஷியலிஸ்டு தலைவர்களோ, கூட்டுமுயற்சியில் சேரமாட்டோம் என்கின்றனர்! "இந்தக் கூட்டு முயற்சியில் சேர்ந்தால் — தங்கள் கட்சியின் பலம் குறைந்துவிடும் என்று சோஷியலிஸ்டுகள் கருதலாமல்லவா?" என்று சிலர் கேட்கலாம். அப்படி சந்தேகப்படுவோருக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறோம்—பல கட்சிகளோடு சேர்வதால், தமது கட்சி பலவீனமாகும் என எதிர்பார்ப்பது, மிக மிக வேடிக்கையானதாகும்.

ஒவ்வொரு கட்சியும், தத்தமக்கென, சில கொள்கைகளுக்காகத்தான், போராடிக்கொண்டிருக்கின்றன. அந்த கொள்கைகளாலேயே வளர்ந்துகொண்டிருக்கின்றன. 'தலைமைப் பதவிக்காக ஒரு கட்சி' என்று, மனப்பான்மை கொண்டோரின், மண்டைக் கனத்தை மக்கள், இனி மதிக்கமாட்டார்கள். கொள்கைகளின் தீவிரமே, கட்சிகளின் ஊன்றுகோலாகும்.

தேவைப்படும் மருந்தைத் தரும் டாக்டரைத்தானே, நோயால் வாடுவோர், எதிர்பார்ப்பர்—விரும்புவர். நல்ல மருந்து வைத்திருக்கும் வைத்தியர், நாலு வைத்யரோடு சேர்ந்து பேச, ஏன் பயப்படவேண்டும்?

மற்ற கட்சிகளோடு சேர்வதால் 'மாத்து' குறைந்துவிடுமோ, என அஞ்சுவது, தாங்கள் சுமந்திருக்கும் கொள்கைகளின் வலிவையே சந்தேகிப்பதாகும். இந்த அளவு சந்தேகம், சோஷியலிஸ்டு தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்குமென, நாம் நம்பவில்லை.

* * *

சென்னை மாநிலத்தில் காங்கிரசுக்கு எதிராக அமைக்கப்படும் சர்க்காரில், காங்கிரசை தோற்கடித்த அத்தனை கட்சிகளும் ஒன்று சேர்ந்தால்தான், ஒரு அமைதியான சர்க்கார் இயங்கமுடியும் என்று, எல்லோரும் நம்புகின்றனர். பிரஜா கட்சிபோன்றவைகள்கூட, இந்த முயற்சியில் பங்கேற்கும்போது, முற்போக்குக் கொள்கைகள் பேசும் சோஷியலிஸ்டுகள், இம்முயற்சியில் பங்கேற்காமல் தயங்குவது—விசித்திரமாகமட்டுமல்ல, வேதனையாகவும் இருக்கிறது.

"எந்தச் சர்க்கார் ஏற்பட்டாலும், சோஷியலிஸ்டு கட்சி எதிர்கட்சியாகவே விளங்கும்."

என்று, சோஷியலிஸ்டு தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். இதன் நோக்கத்தைப்பற்றி கவனிக்குமுன், இந்தப் போக்கால் விளையும் விபரீதங்களைக் கவனிக்கவேண்டும். 'காங்கிரசுக்கு எதிராகவும், கூட்டுமுயற்சிக்கு எதிராகவும், இருப்போம். எங்களது போக்கு இரண்டுக்கும் நடுநிலையுள்ளதாகவே இருக்கும்" என்று அவர்கள் கூறுவதில், ஆபத்து இருக்கிறது.

இந்த 'நடுநிலைமை'யால், இங்கே, காங்கிரசை எதிர்த்து ஒரு கூட்டு சர்க்கார், அமையாமல்கூடப் போய்விடலாம். ஏனெனில் கூட்டு முயற்சியில் பங்குகொண்டிருக்கும் கட்சிகளின் மொத்த எம். எல். ஏக்கள் தொகை 190 ஆகும். 375-பேர் கொண்டசட்டசபையில், இன்னும் பலமான மெஜாரிடியிருக்கவேண்டுமேயானால் சோஷியலிஸ்டு போன்றோரும் பங்கேற்றால்தான் முடியும். அவர்கள் 'நடுநிலை'யாக இருப்போம் என்று ஒதுங்கினால், காங்கிரசின் ஆட்சி ஏற்பட வாய்ப்பு, உண்டாகலாம்.

## மகிழ்ச்சி

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் தோழர் க. அன்பழகன் M. A., அவர்களின் துணைவியார் வெற்றிச் செல்வியாருக்கு 17—2—52-ல் ஒரு ஆண் மகவு பிறந்து தாயும், சேயும் நலமென்ற சேதி கேட்டு மகிழ்கிறோம்.

இந்த நிலையைத்தான், சோஷியலிஸ்டுகளின் முடிவு கொண்டு வருகிறது.

கூட்டுசர்க்கார் அமைப்பதெற்கென ஐக்கிய ஜனநாயக முன்னணியார் வகுத்திருக்கும் குறைந்த பட்சதிட்டம் (Minimum Programme) சோஷியலிஸ்டு கட்சி ஏற்கமுடியாததல்ல. அப்படியே அபிப்பிராய பேதங்களிருந்தாலும், கூடிக்கலந்து கூட்டவும் குறைக்கவும், செய்யலாம். இருந்தும், சோஷியஸ்டுகள் 'நடுநிலைப் பாதை'யில்தான் இருப்பார்களாம்!

கூட்டு முயற்சி வெற்றியளிக்காமற் போனால், அதனாலேற்படும் பழிக்கு சோஷியலிஸ்டுகள் இலக்காகத்தான் செய்வர். காங்கிரசுக்கு எதிராக வோட்டுப் பெற்றுச் சென்ற நீங்கள், ஏன், காங்கிரசுக்கு எதிரான அரசாங்கம் அமைக்க ஒத்துழைக்கவில்லை?' என்று மக்கள் மன்றம், கேட்காமல் போகாது.

இதை, மனத்திலிருத்தி, தமது முடிவை, புனராலோசனை செய்ய வேண்டும் என்று சோஷியலிஸ்டு எம். எல். ஏ.,க்களுக்கு ஆலோசனை கூற விரும்புகிறோம்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் பொதுமக்களின் விருப்பத்துக்கெதிராக, ஒதுங்கினால், சோஷியலிஸ்டுகள் மீது, மக்களுக்கிருந்து வரும் தப்பெண்ணம், அதிகமாகவே செய்யும்.

"காங்கிரசின்—மறுபதிப்பு" என்று இவர்கள் பற்றி பேசப்படும் கூற்று, வலிவுள்ளதாகிவிடும். இத்தகைய குற்றச்சாட்டைக் கழுவிக்கொள்ளும், நல்லசந்தர்ப்பம், இந்த நேரம். இதை நழுவவிடுவதால் ஏற்படும் பலாபலன்களை சோஷியலிஸ்டுகள் நன்றாக சிந்திக்க வேண்டும்—வடநாட்டு சோஷியலிஸ்டுகளைவிட தென்னாட்டிலுள்ள சோஷியலிஸ்டு தோழர்கள், இந்த விஷயத்தில், அதிக கவனம் செலுத்தவேண்டும்.

முற்போக்கு கட்சியெனச் சொல்லிக்கொண்டு, பிற்போக்குக் கட்சியான காங்கிரஸ் ஆட்சிபீடம் அமர அனுமதிக்கும், எவரையும், எதிர்காலம் - மதிக்காது; நம்பாது.

# நெய்வேலி நிலக்கரி

"சென்னை மாகாணத்துக்கு தற்போது தேவைப்படும் நிலக்கரி 30-லட்சம் டன்களாகும். ஆனால், 11-லட்சம் டன் மட்டுமே, ரயில் மூலமும், கடல் மூலமும் நமக்குக் கிடைக்கிறது. இதனால், நம்முடைய, தொழில் வளர்ச்சி தடைப்படுகிறது"

* * *

"சென்னையில நிலக்கரியின் விலை ஒருடன்னுக்கு ரூ. 35-முதல் 40-வரை ஆகிறது. சில இடங்களில் ஒருடன் விலை ரூ. 70 ஆகக்கூட இருக்கிறது. இதனால், இங்கே உள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலை, உயர்கிறது."

* * *

"தென் ஆற்காடு, நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி உலகத்திலேயே மிகச் சிறந்ததாகும். ஜெர்மனியில் கிடைக்கும் உயர்ந்த ரகத்தையும் விட, ஆஸ்திரேலியாவில் அகப்படும் பழுப்பு நிலக்கரியையும்விட, இது மிகமிக உயர்ந்தது. தொழில்களுக்கு இது பெரிதும் பயன்படும்."

* * *

"சுமார் நூறு மைல் பரப்பில் 200-கோடி டன் பழுப்பு நிலக்கரி கிடைக்குமென இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த கமிட்டி அறிவித்திருக்கிறது"

* * *

சிந்தைகளிக்கும் இத்தகவல்களைத் தந்திருப்பவர் சென்னை சர்க்கார் அபிவிருத்தி இலாகா காரியதரிசியான ஜே எம். லோபோபிரபு ஆகும். "டில்லியின் தொடர்பைத் துண்டித்தால் திகைக்கவன்றோ, நேரிடும்" என்று சிலர் செப்புகிறார்களே, அவர்கள் திருப்பார்வைக்கு, "நெய்வேலி"யைக் காட்ட விரும்புகிறோம். 'வைரத்தை விட மதிப்புள்ளது, நிலக்கரி' என்று கூறுகின்றனர், இன்றைய ஆராயச்சியாளர்கள். இன்றைய தொழிலுலகத்தில், நிலக்கரி, மிகமிக இன்றியமையாதது. அது இருக்கிறது, இங்கு! அதிலும்—

# எல்லை காந்தி

★

'எல்லைக் காந்தி என அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் அவர்கள், லாகூர் சிறையில், நோய் வாய்ப்பட்டுக் கிடப்பதாக, 'பாகிஸ்தான் டைம்ஸ்' இதழ் தெரிவிக்கிறது. பாகிஸ்தான் ஏற்பட்ட நாள் முதல், எல்லைகாந்தி, சிறை வாழ்க்கையில் கிடந்துழல்கிறார், என்பது யாவரும் அறிந்ததே யாகும். அந்த கிழவர், காங்கிரஸ் இயக்கத்தில், முக்கியமான வரிசையிலிருந்து பணியாற்றினார். காங்கிரசின் கொள்கைப்படி, 'பிரிவினை கூடாது' என்று, கருத்துக்கொண்டிருந்தவர் தான். ஆனால், பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு, அவர் மறுக்கவில்லை. 'பாகிஸ்தானிலிரேன்! இந்தியாவுக்கு வந்துவிடுகிறேன்' என்று பிறந்த மண்ணைவிட்டு, ஓடிவந்து விடவுமில்லை. இளமை முதல், பொது வாழ்வில், பற்பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆட்பட்ட, தீரர் அவர். அத்தகைய ஒருவரை, சிறைக்குள் வாடவிடுவது, நீதியல்ல—என்பதை நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். இத்தனை ஆண்டுகள் ஒரு பொதுத் தலைவரை, பூட்டி வைப்பதென்பது — விரும்பப்படாத காரியமாகும். புதிதாகப் பிறந்துவளரும், பாகிஸ்தான், இதுபோன்ற பொதுஜனத் தலைவர்களைப் பூட்டிப் போடுவதன் மூலம், மக்களின் மனஎரிச்சலைப் பரிசாகப் பெறுவது, நல்லதல்ல. ஆகவே, சிறையில் வாடும் வீரரை, விடுதலை செய்ய வேண்டுமென, வலியுறுத்துகிறோம். குடல் நோயால் கொத்தப்படுகிறாராம், அவர். வளரும் புது நாடுகள், அடக்குமுறைகளை நம்புவது, ஆபத்தை அணைப்பதாகும். இந்தப் பாதையில் சென்ற இந்திய சர்க்கார் இன்று, அதற்கான பரிசை பெற்று வருகிறது-தேர்தலில்! இந்த நிலைதான், அடக்குமுறைப்பாதையில், செல்லும் எவருக்கும் ஏற்படும். இதை பாகிஸ்தான் சர்க்கார், உணரவேண்டும் என விரும்புகிறோம் — சகோதர நாடென்பதால்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்து ஒரு படம் இருக்கிறதே சார் அதைக் கொஞ்சம் விளக்கிக் கூறுங்கள்.

ஆசி:- இந்த மஞ்சள்கலர் இருக்கிற இடமெல்லாம் மங்கோலியர் வசிக்கிறார்கள். வைலட்கலர் ஆர்ய—திராவிடரைக் குறிக்கும்.

மாண:- ஆர்ய திராவிடர்னு என்ன சாதி சார்.

ஆசி:- சாதியில்லேடா. ஆரிய இனமும் திராவிட இனமும் கலந்து புது இனம் உண்டாகி அந்த மக்கள் வாழும் இடம்.

மாண:- சரி சார்.

ஆசி:- இந்த பச்சை மங்கோலிய—திராவிட இனத்தைக் குறிக்கும் இந்த லேசானபச்சை இருக்கிறதே அது திராவிட இனத்தவர் வாழும் இடம்.

மாண:- இப்போது கூடவா சார்.

ஆம்:- ஆமாண்டா! இப்பத் நிலையைதான் படத்திலே போட்டு காட்டியிருக்கான்.

மாண:- அப்போ பார்க்கபோனு திராவிட இனத்தவர்தான் இந்தியாவிலே அதிகம்போல இருக்குது.

ஆசி:- ஆமாம் அது எப்படி கண்டு பிடிச்சே?

மாண:- படமே சொல்லுதே சார். சென்னை, ஐதராபாத், ஒரிஸ்ஸா பீகார் எல்லா மாகாணங்களும் திராவிட மக்கள் வாழக்கூடியதாகவே வர்ணம்தீட்டிக் காட்டப்பட்டிருக்கிறதே.........ஏன் சார் "திராவிட நாடு" என்று பிரிவினை கேட்கிறார்களே இந்தவர்ணம்பூசப்பட்டபாகம் தானு சார் அது..

ஆசி:- ஓ ஹோ! இந்த சந்தேகந் தானு உனக்கு போடா இடத்திற்கு.

மாண:- சார் தேசப்படப் புத்தகத்தில் உள்ளதைத்தானே சார் கேட்கிறேன் அதுக்குள்ளே கோவிச்சிக்கறீங்களே.

ஆசி:- இந்த மாதிரி சந்தேகமெல்லாம் இனி பள்ளிக்கூடத்தில் கேட்காதே. இங்கே கூடாது.

மாண:- அப்போ வீட்லேவந்து கேட்கட்டுமா சார்?

(மணியடித்தல்—மாணவர்கள் கலைதல்)

## செய்திக் கதிர்

"இந்திய சர்க்காரிடமிருந்து நிதி கிடைத்திருந்தால், ராஜ்ப சர்க்காரின், பிரதான அணைக்கட்டுத் திட்டங்கள் இந்த ஆண்டு கஷ்டமில்லாமல் நிறைவேற்றப்பட்டிருக்கும்"

—சென்னை சர்க்கார் அறிக்கை

* * *

நிருபர்:- ஏன், மாலம்புழா போன்ற நீர்த்தேக்க வேலைகளை தொடர்ந்து செய்யவில்லை.

பக்தவச்சலம்:- சர்க்கார் கஜானுவில் பணமில்லையே!

* * *

"இந்திய சர்க்காரிடம் இந்த ஆண்டு 20 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாக மிச்சமிருக்கிறது"

—"தினசரி"

* * *

"இருபது கோடி ரூபாய் மிச்சமிருக்கிறதே! அப்படியிருக்க, மத்ய சர்க்கார் ஏன் தான், இந்தத் திட்டத்துக்கு பண உதவி புரியவில்லையோ, எனக்குத் தெரியவில்லை"

—மாதவ மேனன்

* * *

இந்தச் செய்திகள் கொஞ்சம் பழையவை; அதாவது இரண்டொரு மாதங்களுக்குள், அமைச்சர்களால்—இப்போது மாஜிகள்!—சிந்தப்பட்டவையாகும். இதுபற்றி, காரைக்குடி 'வாரச் செய்தி' இதழ் எழுதியிருக்கிறது— கடந்த வாரம்.

இந்திய சர்க்காரிடம் இருக்கும் 20 கோடி ரூபாயில் சென்னையை நம்பி கேவலம் 20 லட்சம் ரூபாய் தரமாட்டார்கள் அவர்கள். சென்னையை டில்லி அவ்வளவு மட்டமாகவா மதிக்கிறது? அங்கு வடநாட்டிலே மலாம்புழாவைவிட மிகப் பெரிய பல திட்டங்களுக்கு கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டிக் கொடுத்தக் கும்பல் டில்லி, தென்னாட்டின் வாழ்வை ஓரளவு வளப்படுத்தும் இந்தச் சிறியதொகையான 20 லட்சத்தைக் கொடுத்துதவ மறுக்கிறதென்றால், தென்னாட்டை டில்லி அலட்சியப் படுத்துகிறதென்று தான் பொருள்"

[மலையாளப் பகுதியிலே ஓடிக் கொண்டிருக்கும் வற்றாத ஓர் ஆறு மாலம்புழா. இதற்கு அணை கட்டினால் ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் டன் அரிசி கிடைக்கும். சென்ற ஆண்டில் துவக்கப் பெற்ற இந்த அணைக்கட்டுக்கு இதுவரை 60 லட்சம் செலவாகியிருக்கிறது. இன்னும் 20 லட்சம் தான் தேவை, வேலை முடிய—அது கிடைக்காததால், வேலைகள் நடக்கவில்லையாம்.]

★

## பரிதாபம்!

காந்தியடிகளின் 'குரலாக' விளங்கிய "ஹரிஜன்" இதழை, நிறுத்தி விடுவதென முடிவுசெய்திருக்கிறார்களாம்—காந்தியாரின் நவஜீவன் டிரஸ்ட் அதிபதிகள். காரணம், அந்த இதழை ஆதரிப்போர் தொகை குறைந்துவிட்டதாம், சந்தாதார்கள் இல்லையாம். பரிதாபத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள், நிர்வாகிகள்.

எப்படியிருக்கமுடியும், ஆதரவு? காந்தியார் மறைந்ததுமே, அவர் விருப்பத்துக்கு மாறாக நடந்துவரும், காங்கிரஸ் வாதிகளுக்கு இந்தப் பத்திரிகை, கண்ணிலா, படப்போகிறது! கள்ள மார்க்கெட், கொள்ளைலாபம், ஊழல் இலஞ்சம் இவைகளில் செலுத்தும் கவனத்தை வேறெதில் செலுத்துவர், கதர் குல்லாய்கள்! பரிதாபப் படுகிறோம், காந்தியாரின் குரலை நினைத்து!!

### முகவரி மாற்றம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
'தனியரசு'
விருதுநகர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.